**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

| தொடர்புடைய தரத்துடன் கூடிய தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமைக் கூற்றின் செலவினம் ரூபா.182,594,766 ஆன இருப்புகளில் உள்ளடக்கப்பட்டு சேதமடைந்திருந்த மற்றும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த செலவினம் ரூபா.25,072,505 ஆன இருப்புகள் தொடர்பில் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 09 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஆண்டு இறுதி இருப்புகளை கணக்கிடுவதற்கு பல்கலைக்கழக ஒப்பாய்வு சபை நியமனம் செய்யப்படுவதுடன், குறித்த ஒப்பாய்வு சபைகளால் ஒவ்வொரு அலகுகளினதும் இருப்புகளை பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்யப்படும் குறித்த பௌதீக இருப்பு ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஆண்டு இறுதி மீதிகளை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு அலகுகளிலும் உள்ள இருப்புகளை பௌதீக ஆய்வுக்கு உட்படுத்தி இறுதியில் உள்ள முடிவு மற்றும் முடிவுக்கப்படாத இருப்புகளையும், அடையாளம் காண முடியாத இருப்புகளையும் அடையாளம் காணப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | தொடர்புடைய தரத்துடன் கூடிய தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானம் செவ்வையாக அடையாளம் காணாது, மாணவர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் அடையாளம் காணப்படாத மாணவர் வருமாணக் கணக்கின் மீதி என்பவற்றுக்கிடையில் ரூபா.302,544,894 ஆன வேறுபாடு கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமாணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இரண்டு பேரேடு கணக்குகளான மாணவர் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் அடையாளம் காணப்படாத மாணவர் வருமாணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானம் கணக்கிப்பட்டுள்ளதால், நிதிக் கூற்றுகளில் கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி செவ்வாயனது என்பதை குறிப்பிடுகின்றேன். | கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானம் அடையாளம் காண்பதற்கும் கணக்கு வைப்பதற்கும் செவ்வையான முறை தாபித்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் கொள்கை பிரகாரம் பதிவினை புதுப்பிக்காது 05 ஆண்டுகள் விஞ்சிய மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானம் ஒவ்வொரு ஆண்டிலும் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் 05 ஆண்டுகள் விஞ்சிய, மாணவர்களிடமி- | ஒவ்வொரு ஆண்டும் 05 ஆண்டுகளை விஞ்சி பதிவுகளை புதுப்பிக்காத மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ஏதேனும் பணத்தொகை இருப்பின், அந்த பணத்தொகையினை செலவினமாக பதிவழிப்பதற்கு பல்கலைக்கழகம் நட- | அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய ஏனைய கட்டணங்களை கைவிடுவதற்கு அனுமதி வழங்குவதற்கும், கவனயீனமனாக அல்லது தவறுதலாக அல்லது மோசடி |

| | | | |
|---|---|---|---|
| | ருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா.40,655,161 ஆன மாணவர் வருமானம் பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. | வடிக்கை மேற்கொள்கின்றது. ஆகையால் பல்கலைக்கழகம் விட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய பணத் தொகையினை சரியான வகையில் அறவிடல் நடைமுறையில் மேற்கொள்ள இயலாது. | ஏற்படவில்லையென அறியவருகின்ற எந்த சந்தர்ப்பத்திலேனும், அதற்காக திறைசேரி செயலாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமாவதால், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | கொடுப்பனவு வவுச்சர், பற்றுச்சீட்டு அல்லது நாளேட்டு வவுச்சர் மூலம் பேரேடு கணக்கில் பற்று அல்லது வரவு குறிப்புகளை இடுதல் வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தின் OMIS கணினி முறைமையில் காணப்பட்ட குறைப்பாடுகள் காரணமாக தேய்மானக் கணக்கு மற்றும் தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் Day end process transaction என்ற வகையில் கணினி கணக்கீட்டு முறைமையினுள் குறிப்புகள் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு பேரேடு கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருப்பினும், செவ்வையாக்கப்படாத ரூபா. 25,692,337 ஐ ஆண்டு இறுதியில் நாளேட்டுக் குறிப்புகளை பயன்படுத்தி தேய்மானக் கணக்கு மற்றும் தேய்மானம் ஒதுக்கீடு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் சம்பளம், இருப்புகள், சொத்துக்கள் ஆகிய பேரேடு கணக்குகளிலும் ஆதார ஆவணங்களின்றி, Day end process transaction என்ற வகையில் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | OMIS முறைமையில் சொத்துக்கள் பதிவேடு பல ஆண்டுகளாக இற்றைப்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டதுடன், அந்த முறைமையில் காணப்படும் எல்லைகள் காரணமாக அதனை பின்னர் செவ்வையாக்குவதற்கும் இயலவில்லை. ஆகையால் கணினி முறைமை மூலம் தேய்மானம் கணக்கிடல் செவ்வையாக மேற்கொள்ளப்படமாட்டாது.<br>அதன்படி கணினி முறைமை மூலம் வழங்கப்படும் தேய்மானம் கணக்கிடும் நாளேட்டுக் குறிப்புகள் மூலம் அகற்றப்பட்டு, செவ்வையாக கணக்கிடப்பட்டு வருடாந்த தேய்மானப் பெறுமதி நாளேட்டுக் குறிப்புகள் மூலம் கணினி முறைமையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சம்பளத்திற்கான கணினி முறைமை (Payroll System) மற்றும் இன்வென்ட்ரி மொடியுள் மூலம் நேரடியாக மேற்கொள்கின்ற மாற்றுதல்களாக (Day end Process Transaction) குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், சம்பளம், இருப்புகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்புடையதான ஆதார கடித ஆவணங்கள் கணக்கு பிரிவிடம் உள்ளன. | செவ்வையான கணினி முறைமை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.1 சட்டங்கள்,விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

---

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| சட்டங்கள்,விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி 102, 103, 104, மற்றும் 2016 பெப்ருவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஒழுங்குமுறையில் ரூபா.19,517,405, ரூபா.2,637,980, மற்றும் ரூபா .2,891,380 ஆன சேதங்களுக்குள்ளான புத்தக இருப்புகளை பதிவழிப்பதற்காக திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்ளாது பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி மீது மட்டும் பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், இருப்புகளின் பற்றாக்குறை, மிகை தொடர்பிலும் ஆரம்பம் தொடக்கம் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இருப்புகளின் ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட இருப்புகளின் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் படி உரிய நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| | (ii) 2018 ஆம் ஆண்டின் பொருட் மீளாய்வு சபை யின் அறிக்கை பிரகாரம் நிலவிய வேறுபாடுகள் தொடர்பாக அடிப்படை புலனாய்வினை மேற்கொள்வதற்காக துணைவேந்தர் அவர்களால் இரண்டு புலனாய்வு சபைகளை நியமனம் செய்யபபட்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும்போது அது தொடர்பான நடவடிக்கைகளை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மேற்கொண்ட பொருட் இருப்புகளின் மீளாய்--வில் குறை பயன்பாட்டு பொருட்களுக்காக நியமனம் செய்த புலனாய்வு சபை அறிக்கைகளை அடிப்பயைடாகக் கொண்டு கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியுடன், ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயி | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | னும், சில சபை அறிக்கைகளை இதுவரை வழங்கப்படவில்லை. இது தொடர்பில் ஏற்புடைய புலனாய்வு சபைகளிடம் பலமுறை நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. உரிய அறிக்கைகள் கிடைக்கப்பெற்றவுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ii) | நிதி ஒழுங்குவிதி 394 (இ) | 08 ஆண்டுகளாக இருந்து வரும் செல்லுபடியாகாத காசோலைகளை வைப்புக் கணக்கில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 1,232,629 ஆன மீதி தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | செல்லுபடியாகாத காசோலைகளின் வைப்பு மீதி பல்கலைக்கழகத்தின் வருமானத்தில் எடுப்பதற்கு இவ்வாண்டில் பணியாற்றப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் ஆவணப்படுத்தல் வேண்டும். |
| (iii) | நிதி ஒழுங்குவிதி 756 | 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்படுகின்ற செலவினம் ரூபா. 181,639,603 ஆன நூலகப் புத்தகங்களை ஆய்விற்கு உற்படுத்தியிருக்கவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் ரூபா.182,594,766 ஆன இருப்புகளை கணக்கிடுகையில் அச்சகத்திலிருந்த முடிவுறாத இருப்புகள் மற்றும் எல்லா பிரிவுகளிலும் அனைத்து இருப்புகளையும் பௌதீக ரீதியாக ஆய்வுக்கு உற்படுத்தியிருக்கவில்லை. | ஆண்டு இறுதி இருப்புகளை கணக்கிடுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆய்வு சபை நியமனம் செய்யப்படுவதுடன், குறித்த ஆய்வுச் சபைகள் ஒவ்வொரு பிரிவகளிலும் இருப்புகளை பௌதீக ரீதியாக அய்வுக்கு உட்படுத்துகின்றது.<br><br>குறித்த பௌதீக இருப்பு மீளாய்வு அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஆண்டு இறுதி இருப்பு மீதிகளை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் எல்லா பிரிவுகளுக்குமான இருப்புகளை பௌதீக ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தி கணக்காய்வாளர் அதிபதியிடம் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க | மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டு- | நிலையான சொத்துக்களுக்காக கணினிமயப்படுத்திய முறைமையில் உள்ள குறைப்- | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொ- |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரி சுற்றறிக்கை | ள்ள ரூபா.14,424,847,934 ஆன சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகிய ரூபா.18,968,248 ஆன புலனாகாத நிலையான சொத்துக்களின் பொருட்டு நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாடுகள் காரணமாக நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தால் தாபிக்கப்படுகின்ற புதிய கணினி முறைமை மூலம் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்துவதற்கு கருதுவதுடன்,குறித்த முறைமை மூலம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் குறைப்பாடுகளை தவரித்துக்கொள்வதற்கு முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். | ண்டு, நிதி நிலைமை கூற்றில் வெளிப்படுத்தப்படும் நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் XX அத்தியாயத்தின் 3.1 பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆந் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | கல்விசார் பணியாற்றொகுதியில் 354 அலுவலர்களின் வருகை வெளியேறல் உறுதிப்படுத்திக் கொள்ளாது மீளாய்விற்கான ஆண்டில் சம்பளம் மற்றும் படியாக ரூபா.1,601,385,340 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் பணியாற்றொகுதியின் வேலை விதிமுறைக்கமைவாக (Work norm) கல்வி பிரிவு தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகளின் மேற்பார்வையின் கீழ் தமது நேர அட்டவணைப்படி கல்விசார் பணிகளை மேற்கொள்ளப்படுகிறது. தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க நிருவாக சுற்றிக்கையில் ஏற்பாடுகள் அளிக்கப்பட்டிருப்பினும், கல்விசார் பணியாற்றொகுதியின் வருகை மற்றும் வெளியேறல் விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் குறிப்பு வைக்கப்படுவதில்லை. | 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரச தொழில்முயற்சிகள் செயற்குழு கூட்டத்தில் அது தொடர்பான முறைமை ஏற்படுத்துவதற்கு உயர் கல்வி செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர் இணங்கியதாக இதற்கு முன்னரான பதில்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அலுவலர்களுக்கு தேவையான நடைமுறைகள் மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |
| (<) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/ 12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்று- | நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்களின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளாது நிறுவனத்தால் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் | 2020 ஆம் ஆண்டில் எந்தவொரு குறுகிய கால முதலீடும் மேற்கொள்ளப்படவில்லை. ரூபா.670,222,783ஆன | சுற்றுநிருபம் பிரகாரம் முன் அனுமதி பெற்றுக்கொண்டு முதலீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிருபத்தின் 8.2.2 பிரிவு | திகதியில் ரூபா.94,679,223 ஆன நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பணத் தொகை ஒரு ஆண்டில் முதலீடு செய்யப்படுவதில்லை என்பதுடன், பல ஆண்டுகளின் முதலீடுகளாகும். அதன்போது Generated Fund இல் முதலீடு செய்யப்படும், ரூபா.251,886,511 இற்காக திறைசேரியின் அனுமதி பெற்றுக்கொள்ளும் கடிதங்கள் திறைசேரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------

### 2.1 நிதிசார் விளைபயன்

------------------------

மீளாய்விற்கான ஆண்டின் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 531,516,776 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரோத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 587,333,873 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 57,817,097 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் அளிப்புகள் மற்றும் குறுகியகால கற்கைநெறிகளின் வருமானம் அதிகரித்தல் பிரதான காணரமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

----------------------------

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

---------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தால் பயன்படுத்துகின்ற பிராந்திய நிலையங்கள் மற்றும் 19 கல்வி நிலையங்களில் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 584,909,510 ஐ செலவிடப்பட்டு கட்டிடங்களை நிருமாணிக்கப்பட்டிருப்பினும், அந்தக் காணியின் சட்டரீதியான உரிமை பல்கலைக்கழகத்திடம் பெற்றுக்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 அந் திகதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தால் சட்டரீதியாக உரித்து பெறப்படாத காணித் துண்டுகள், பல்கலைக்கழகத்தால் பயன்கொள்கின்ற 25 காணி துண்டுகளில் 17 இல் உரித்து 2021/07/19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பல்கலைக்கழகத்திடம் கையளிப்பதற்கு தேவையான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், காணி ஆணையாளர் நாயகம் மூலம் சம்பந்தப்பட்ட காணிகளின் உரித்தை பல்கலைக்கழகத்திடம் சட்டரீதியாக கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கான பின்னாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சம்பந்தப்பட்ட காணிகளில் சட்டரீதியான உரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அதேபோன்று பல்கலைக்கழகத்தால் பயன்கொள்கின்ற ஏனைய காணிகளையும், பல்கலைக்கழகத்திடம் சுவீகரித்தக்கொள்வதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | 1992 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை சேவை இடைநிறுத்திய, சேவை முடிவுறுத்திய, சேவையிலிருந்து அகற்றிய, சேவை வெறித்தாக்கிய, பணித்தடை மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற காரணங்களால் 18 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 850,958 ஐ அறவிடுவதற்காக 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் போதும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அறவிடப்படாத கடன் மீதிகளிலிருந்து ரூபா.174,406 ஆன பணத்தொகையினை சம்பந்தப்பட்ட நபரின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து குறைத்துக்கொண்டு பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ரூபா. 147,790 கடன் மீதிகளை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட நபர்களது ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கும் பத்திரங்கள் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா. 380,972 கடன் மீதிகளை அறவிடுவதற்காக சம்பந்தப்பட்ட நபர்களது ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கும் பத்திரம் எமக்கு கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், குறித்த பத்திரங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவர்களது ஊழியர் சேமலாப நிதி விடுவிக்கையில் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சம்பந்தப்பட்ட கடன் தொகையை அறவிடுவதற்கு துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 1989 ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரையிலான காலவெல்லைக்குள் முறி உடன்படிக்கைகளை மீறிய 11 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 19,884,652 பணத்தொகையை, உடன்படிக்கை மீறிய திகதி தொடக்கம் கணக்காய்வு திகதியான 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை. 04 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 4,942,969 ஆன முறி உடன்படிக்கையின் பெறுமதியை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக கணக்காய்விடம் அறிவித்திருப்பினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவிவ்லை. | ஒரு கடனாளியின் முகவரி கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், அது காலவதியாகியுள்ளதால், ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடும் ஆற்றலை தேடி பார்க்கப்படுகிறது. அதேபோன்று 6 அலுவலர்கள் தொடர்பில் ஆரம்ப கடனாளிகளதும் பிணையாளர்களதும் முகவரிகளை கண்டறிவதற்கு இயலாதபடியால் வழக்கு தொடருவதற்கும், உடன்படிக்கை பெறுமதியினை அறவிடுவதற்கும் முடியாதுள்ளது.<br><br>05 கடனாளிகளின் கடன் மீதி ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும், மேலும் ஒரு கடனாளிக்கு வழக்கு தொடருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணம் காலவதியாவதற்கு முன்னர் அறவிடுவதற்கு முடியுமான வகையில் முறைமை தாபித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழகத்தில் 05 பிரிவுகளுக்கான நடவடிக்கைகள் தொடர்பாக 05 மொடியுள்களாக தாபிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ தகவல் முறைமையில் (OMIS) காணப்படும் குறைப்பாடுகளை தீர்ப்பதற்குகு சம்பந்தப்பட்ட பராமரிப்புகளை மேற்கொள்வதற்கு கம்பெனிக்கு முடியாதிருந்தது. ஆகையால் தற்போதுள்ள தகவல் முறைமையிலும் பார்க்க வினைத்திறன் மற்றும் பல்கலைக்கழகத்தின் தேவைக்கமைவாக தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் தகவல் முறைமை தாபித்துக் கொள்வதற்காக பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியுள்ளதாக துணைவேந்தரால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும், உரிய குறைப்பாடுகளை செவ்வைபடுத்துவதற்கோ புதிய தகவல் முறைமை தாபிப்பதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | புதிய தகவல் முறைமை தாபிக்கும் நடவடிக்கை நடைமுறைப்படுகின்றது. அந்த முறைமையின் ஆரம்பமாக மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தொடக்கம் புதிய முறைமை மூலம் செயற்படுத்தப்படுகின்றது. ஏனைய நடவடிக்கைகளும் கட்டங்களாக புதிய முறைமை மூலம் எதிர்வருங் காலத்தில் நடைமுறைப்படும். | சரியான முகாமைத்துவ தகவல் முறைமை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |